# உச்சநீதிமன்றத்தின் முக்கிய அரசியல் சாசன தீர்ப்புகள்



1. **செண்பகம் துரைராஜன் (எதிர்) மதராஸ் மாகாணம் (Chanpakam Dorairajan Vs State of Madras 1951)**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 15(4), குடிமக்களில் சமூக மற்றும் கல்வி வழி பின்தங்கிய குடிமக்கள் **(Socially and educationally backward classes of citizens)** அல்லது தாழ்த்தப்பட்டோர் **(Scheduled Castes)** அல்லது பழங்குடியினர் **(Scheduled Tribes)** மேம்பாட்டிற்காகச் சிறப்பு வழிவகை செய்ய அரசிற்கு அதிகாரமளிக்கிறது. இந்த 4–ஆம் வாசகம் செண்பகம் துரைராஜன் எதிர் மதராஸ் மாகாணம் என்ற வழக்கின் முடிவிற்குப் பிறகு கொண்டுவரப்பட்ட முதல் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் மூலமாகக் கொண்டுவரப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்த போது வந்த தீர்ப்பு இது. மருத்துவக் கல்லூரி இட ஒதுக்கீடுகளில், பிராமணர்கள், பின்தங்கிய இந்துக்கள், அரிஜனங்கள், ஆங்கிலோ – இந்தியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம் ஆகியோருக்கு சாதி அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததை எதிர்த்து செண்பகராமன் வழக்கு நடத்தினார்.

சாதி அடிப்படையிலான ஒதுக்கீடு, பிரிவு 15(1) மற்றும் பிரிவு 29(2) ஆகியவற்றை மீறுவதாகும் என உச்சநீதிமன்றம் கூறியது. பிரிவு 46–இன் கீழ் அரசுக் கொள்கையை வழிநடத்திச் செல்லும் நெறிமுறை, நலிந்த மக்களின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்த அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று வழங்கப்பட்ட தீர்ப்பு பிரிவு 15–இல் புதிதாக 4–ஆம் வாசகத்தைக் கொண்டுவர வழி வகுத்தது. இந்த நான்காம் வாசகம் பின்தங்கிய வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும், பழங்குடியினருக்கும் போதிய பாதுகாப்பு வழங்குகிறது.

2. **கே.எம். நானாவதி (எதிர்) பம்பாய் அரசு (K.M. Nanavati Vs State of Maharashtra 1960)**

கே.எம். நானாவதி எதிர் பம்பாய் அரசு என்ற வழக்கில் ஆளுநரின் அதிகாரம் விவாதிக்கப்பட்டுள்ளது. கே.எம். நானாவதி இந்தியக் கப்பற்படை அலுவலர். தனது மனைவியின் கள்ளக் காதலனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, இவருக்கு பம்பாய் நீதிமன்றத்தில் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. பம்பாய் ஆளுநர் உச்சநீதிமன்றத்தின் மேன்முறையீடு கேட்கப்படும் வரை தண்டனையை நிறுத்தி வைத்து, கப்பற்படையில் சிறையில் வைக்க உத்தரவிட்டார். பின்னர் உயர்நீதிமன்ற தண்டனையை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யக் குற்றம் சாட்டப்பட்ட நானாவதி சிறப்பு அனுமதி கோரினார். அவரது மனு கேட்கப்படுவதற்குமுன் அவரது தண்டனைக்குச் சரணடையுமாறு உச்சநீதிமன்றம் கூறியது. ஆளுநரின் உத்தரவின் கீழ் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி நானாவதி விலக்களிப்பு கோரினார். இதுபற்றி உச்சநீதிமன்றம் கூறும்போது, 'எப்போது வேண்டுமானாலும் நீதிமன்றத்தின் முன்னிலையில் இருக்கும் போது கூட, ஆளுநருக்கு முழுக் குற்ற மன்னிப்பு வழங்க அதிகாரம் உள்ளது. ஆனால் இவ்வழக்கைத் தனது ஆளுகைக்கு எடுக்கும் காலத்தில், இவ்வாறு இடைநிறுத்தத்தை இந்த நீதிமன்றம்தான் செய்ய இயலும். ஆளுநர் செய்ய இயலாது என நீதிமன்றம் கூறிவிட்டது. நானாவதி கோரிய விலக்களிப்பை வழங்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது. அதன்பிறகு ஜூரி **(Jury)** முறைக்கு இந்தியாவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

3. **கோலக்நாத் (எதிர்) பஞ்சாப் மாநிலம் (Golaknath Vs State of Punjab 1967)**



இந்த வழக்கில் உச்சநீதிமன்றம், நமது அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை

மாற்றம் செய்வதற்கு நாடாளுமன்றத்திற்கு உரிமை கிடையாது என்று தீர்ப்பளித்தது.

பஞ்சாப், ஜலந்தரில் ஹென்றி மற்றும் வில்லியம் கோலக்நாத் குடும்பம் 500 ஏக்கர் நிலம் வைத்திருந்தது. 1953–ஆம் ஆண்டில் பஞ்சாப் அரசு, அவர்கள் 30 ஏக்கர் நிலம் மட்டுமே வைத்துக் கொள்ளலாம். மீதியை குத்தகைதாரர்களுக்குக் கொடுத்தது போக, அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என சட்டம் போட்டது. இது 1965–இல் உச்சநீதிமன்றத்திற்கு வந்தது. அரசியல் சாசனம் சரத்து 32–இன் கீழ் வழக்கு தொடரப்பட்டது. அடிப்படை உரிமைகளின் சொத்துரிமையும் அடங்கும். இதை சரத்து 19(f) மற்றும் (g) உறுதி அளித்தது. (இப்பொழுது மாற்றப்பட்டுள்ளது) இந்த வழக்கில் முக்கியமான வாதம் என்னவென்றால், சரத்து 13(2)–இன் கீழ் சாசன சட்டத்திருத்தம் என்பது சாதாரண சட்டமா– அடிப்படை உரிமைகளில் மாற்றம் செய்ய முடியுமா– அடிப்படை உரிமைகளில் மாற்றம் செய்யமுடியாது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

4. **மாதவ் ராவ் சிந்தியா (எதிர்) இந்திய யூனியன் (Madhav Rao Scindia Vs Union of India 1970)**

மன்னர் மானியங்கள் மற்றும் சலுகைகள், பட்டங்கள் முதலியவற்றை ரத்து செய்து 1970–இல் பிறப்பிக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் ஆணையை ரத்து செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வழக்கின் முடிவில் பிரிவுகள் 291 மற்றும் 392 நீக்கப்பட்டன. புதிய பிரிவு 363A சேர்க்கப்பட்டது.

5. **கேசவானந்த பாரதி (எதிர்) கேரள மாநிலம் (Kesavananda Bharati Vs State of Kerala 1973)**

1973 – கேசவானந்த பாரதி வழக்கு 24–ஆவது சட்டத் திருத்தத்தின் செல்லுபடி தன்மை குறித்தது. அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பு எந்தப் பகுதியையும் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு என்பதே 1971–இல் கொண்டு வரப்பட்ட 24–ஆவது சட்டத்திருத்தம்.

**கேசவானந்த பாரதி வழக்கு :** கேசவானந்த பாரதி என்பவர் கேரளாவில் காசர்கோடு மாவட்டத்தில் உள்ள ஒரு இந்து மடத்தின் தலைவர். அந்த மடத்திற்குச் சொந்தமான நிலங்களை கேரள அரசு கையகப்படுத்த சட்டம் இயற்றியது. இது தொடர்பாக நடந்த வழக்கே மேற்கூறப்பட்டுள்ள வழக்கு. இந்த வழக்கு 13 நீதிபதிகள் கொண்ட ஆணையத்தின் முன் கொண்டு வரப்பட்டது. அனைத்து நீதிபதிகளும் 24–ஆம் சட்டத்திருத்தம் செல்லும் என்பதை ஏற்றுக்கொண்டனர்.

1973–ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் கேசவானந்த பாரதி வழக்கில், நாடாளுமன்றம், அரசியல் சாசனத்தின் எந்தப் பகுதியிலும் மாற்றம் கொண்டு வரலாம், ஆனால் சாசனத்தின் அடிப்படை அமைப்புகள் சிதைக்கப்படக்கூடாது என தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு, கோலக்நாத் வழக்கின் தீர்ப்பை மாற்றி அமைத்துவிட்டது.

6. **ஹிம்மத் லால் ஷா (எதிர்) காவல் ஆணையர் (Himmat Lal Shah Vs Commissioner of Police 1973)**

பொதுக் கூட்டங்களை வீதிகளில் நடத்துவதற்குத் தனிமனிதனுக்கு உரிமை உண்டு. அதன்படி அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.

7. **இந்திரா காந்தி (எதிர்) ராஜ் நாராயண் (Indira Gandhi Vs Raj Narain 1975)**

இந்திரா காந்தியின் தேர்தல் வெற்றி செல்லாது என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் அறிவித்த பின்பு, இந்தியாவில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது. எனினும், அலகாபாத் நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு, உச்சநீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டது.

8. **மாவட்ட நீதிபதி, ஜபல்பூர் (எதிர்) S. சுக்லா (A.D.M. Jabalpur Vs. S. Shukla 1976)**

அவசர நிலைப் பிரகடன காலங்களில் சரத்து 14, 21 & 24 ஆகியவற்றின் கீழ் அடிப்படை உரிமைகளை நிலை நாட்ட உச்சநீதிமன்றத்தை அணுக முடியாது என்பது சரியே என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

9. **மினர்வா மில்ஸ் (எதிர்) மத்திய அரசு (Minerva Mills Vs Union of India 1980)**

இந்த வழக்கில் மக்களுக்கான சமூக நலத்திட்டங்களை அமல்படுத்தும் போது, அடிப்படை உரிமைகள் நசுக்கப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டது.

இவ்வழக்கில் பிரிவு 368–இன் வாசகங்கள் (4) மற்றும் (5) உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வந்தன. "1976–ஆம் ஆண்டின் 42–ஆம் சட்டத் திருத்தத்தின்படி பிரிவு 368–(4)–இன் வாசகம் : 1976 ஆண்டின் சட்டத் திருத்தத்திற்கு முன்னரும் பின்னரும் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தங்களை எந்த நீதிமன்றமும் வினவ முடியாது" என்பதாகும்.

இந்த வழக்கில் 1974–ஆம் ஆண்டின் நலிவுற்ற ஆலைகளை தேசியமயமாக்குதல் சட்டத்தின் சில வாசகங்களின் செல்லுபடி தன்மை எதிர்க்கப்பட்டது. மேலும் 42–ஆவது சட்டத் திருத்தத்தின் 4–ஆவது

பிரிவினால் கொண்டுவரப்பட்ட பிரிவு 31C–ஐயும் எதிர்த்து இந்த வழக்கு நடந்தது.

"31C – வழிகாட்டு நெறிகளைச் செயல்படுத்திடச் சட்டங்களை இயற்றிட இது நாடாளுமன்றத்திற்கு அல்லது மாநிலச் சட்டமன்றங்களுக்கு அதிகாரமளிக்கிறது"

வழக்கின் தீர்ப்பு : 42–ஆவது அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு நான்கினால் கொண்டுவரப்பட்ட பிரிவு 31C–க்கான சட்டதிருத்தம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பை மீறுவதால் அது செல்லாததாகும் என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. மேலும் நாடாளுமன்றத்தை விட அரசியலமைப்பே மேலாண்மை **(Supremacy)** பெற்றுள்ளது என்றும் பிரிவு **368(4)** மற்றும் **(5)** வாசகங்கள் சட்டத்திருத்த அதிகாரத்தை மீறியதால் **(trangress)** அவை அரசியலமைப்பிற்கு முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது.

**10. சாபானோ வழக்கு (Shah Bano Case 1985)**

இந்த வழக்கில் சாபானோ அவர்களுக்கு, விவாகரத்திற்குப்பின் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. இது இஸ்லாமிய தனிச்சட்டத்திற்கு எதிரானது என பலரால் போர்க்கொடி தூக்கப்பட்டது.

**11. இந்திரா சஹானி (எதிர்) மத்திய அரசு (Indira Sawhney Vs Union of India 1992)**

மண்டல் குழு பரிந்துரையின்படி தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்ததை, உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட போதிலும், அவர்களுக்கான ஒதுக்கீடு 50 சதவீதத்திற்குமேல் இருக்கக் கூடாது என்று தீர்ப்பளித்ததோடு மட்டுமல்லாமல் மேல் தட்டு மக்கள் **(Creamy layer)** யார் என விரிவாகத் தீர்ப்பு வழங்கியது.

**12. பி.ஏ. இனாம்தார் (எதிர்) மகாராஷ்டிரா மாநிலம் (P.A. Inamdar Vs State of Maharashtra 2005)**

தனியார் நடத்தும் கல்விக் கூடங்களில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடு முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அவர்களை நிர்பந்திக்க முடியாது எனத் தீர்ப்பளித்தது.

**13. சரளா முத்கல் (எதிர்) மத்திய அரசு (Sarla Mudgal Vs Union of India 1995)**

இரண்டாவது திருமணம், முதல் மனைவி அல்லது கணவன் உயிருடன் இருக்கும் போது நடந்தால் அது தண்டனைக்குரிய குற்றம். இருந்தபோதிலும் அதை ரத்து செய்ய முடியாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**14. விசாகா (எதிர்) ராஜஸ்தான் மாநிலம் (Vishaka Vs State of Rajasthan 1997)**

பாலியல் தொந்தரவு, அது சைகை மூலமாக இருந்தாலும், மெய் தொடுதலாக இருந்தாலும் வேறு எந்தவகையிலிருந்தாலும் அது அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் குற்றமாகக் கருதப்படும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**15. பிரதிநிதித்துவம் திருத்தச் சட்டம் 2002 (Representation of the People (Amendment) Act 2002)**

இந்தத் தீர்ப்பில் உச்சநீதிமன்றம், தேர்தலில் போட்டியிடும் ஒருவர் தனது சொத்து விவரங்களையும், நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குகள் பற்றியும், அதில் எதிலாவது தண்டனை பெற்றிருந்தால் அந்த விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

**16. தமிழ்நாடு (எதிர்) சுகாஸ் கட்டி (Tamil Nadu Vs Suhas Katti 2004)**

இதுதான், தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000–இன் கீழ் முதன் முதலில் தண்டனை வழங்கப்பட்ட வழக்கு. சுகாஸ் கட்டி என்பவர் இணைய தளத்தில் ஆபாசப் படங்களை வெளியிட்டிருந்தார்.

**17. ஓம் பிரகாஷ் (எதிர்) தில் பஹார் (Om Prakash Vs Dil Bahar 2006)**

இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவரின் சாட்சி மட்டுமே குற்றவாளிக்கு தண்டனை அளிக்கப் போதுமானது. மருத்துவச் சாட்சிகள் கற்பழிப்பை உறுதி செய்யாவிட்டாலும், பாதிக்கப்பட்டவரின் சாட்சியமே போதுமானது என்ற அதிரடித் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியது.

**18. மேனகா காந்தி (எதிர்) இந்திய யூனியன் (Menaka Gandhi Vs Union of India -1978)**

பேச்சு (கருத்து) சுதந்திரத்தின் **(Freedom of Speech)** வரையறை பற்றிய இவ்வழக்கில் உச்சநீதிமன்றம், கருத்து சுதந்திரத்தின் வரையறை பிற அடிப்படை உரிமைகளை பாதிக்காத வகையில் இருத்தல் வேண்டும் என்த் தீர்ப்பளித்தது.

**19. ரமேஷ் தலால் (எதிர்) இந்திய யூனியன் (Ramesh Dalal Vs Union of India - 1988)**

பிரிவினைக்கு முந்தைய மதக்கலவரங்கள் மற்றும் அவற்றின் சித்தரிப்பு இந்திய அரசியலமைப்பின் ஷரத்துக்களை பாதிக்காது எனத் தெளிவுபடுத்தப்பட்டது.

**20. சமதா (எதிர்) ஆந்திர மாநிலம் (Samatha Vs State of Andhra Pradesh - 1997)**

பட்டியலிடப்பட்ட பகுதிகளில் பழங்குடியினருக்கோ, வனத்துறைக்கோ சொந்தமான நிலங்கலில் சுரங்க அல்லது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள பழங்குடியினரல்லாதோருக்கோ தனியார் நிறுவனங்களுக்கோ அனுமதி வழங்கக்கூடாது. அத்தகைய நடவடிக்கைகளை பழங்குடியினர் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

21. **நாஸ் அறக்கட்டளை (எதிர்) புதுடெல்லி அரசு (Naz Foundation Vs Govt. of NCT Delhi - 2009)**

இயற்கைக்கு மாறான உடலுறவு (ஓரினச்சேர்க்கை) கொள்பவர்களுக்கு தண்டனை விதிக்க வழிவகை செய்யும் இந்திய தண்டனைச்சட்டம் 1860–ன் பிரிவு 377 இரத்து செய்யப்பட்டது. ஆனால், 2013–ஆம் ஆண்டில் இத்தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டது.

22. **லில்லி தாமஸ் (எதிர்) இந்திய யூனியன் (Lily Thomas Vs Union of India - 2013)**

பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாநில சட்டமேலவை/கீழவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் ஏதாவதொரு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் அதிகமான காலத்திற்கு சிறைதண்டனை பெற்றால் அவர்களின் உறுப்பினர் பதவி இரத்து செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரை உச்சநீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

23. **தேசிய சட்டசேவைகள் ஆணையம் (எதிர்) இந்திய யூனியன் (National Legal Service Authority Vs Union of India - 2014)**

மூன்றாம் பாலினத்தவரை சட்டரீதியாக அங்கீகரித்து அவர்களை சிறுபான்மையராகக் கருதி வேலைவாய்ப்பு, கல்வி போன்றவற்றில் அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கவும், அரசின் இதர சலுகைகளையும், சேவைகளையும் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் பரிந்துரைத்தது.

24. **ஸ்ரேயா சிங்கால் (எதிர்) இந்திய யூனியன் (Shreya Singhal Vs Union of India - 2015)**

இணையத்தில் சர்ச்சையான கருத்துக்களை வெளியிடும் நபர்களை கைது செய்ய வழிவகை செய்யும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 66A-வை அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனக்கருதி உச்சநீதிமன்றம் ரத்து செய்தது.

25. **இந்திய மருத்துவக் குழு (எதிர்) சங்கல்ப் தொண்டு நிறுவனம் (Indian Medical Council Vs Sangalp Charitable Trust - 2016)**

**MBBS** மற்றும் **BDS** (பல் மருத்துவம்) போன்ற படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி வழிமுறைகளை கடைப்பிடிப்பதற்கு பதிலாக நாடு முழுவதும் ஒரேமாதிரியான வழிமுறையைப் பின்பற்றி நுழைவுத்தேர்வின் மூலம் மாணவர் சேர்க்கையை நடத்த 2016 மே மாதத்தில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் 2016–ஆம் ஆண்டிலேயே இந்த நடைமுறையைப் பின்பற்ற இயலாது எனத் தமிழகம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களும் சில தனியார் மருத்துவக் கல்லூரிகளும் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து மத்திய அரசு அவசரச்சட்டம் ஒன்றினைக் கொண்டுவந்து 2016–17 கல்வியாண்டிற்கு மட்டும் நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளித்தது.